## இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு - 2014

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 34 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் - 08**

முன்னைய ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் ரூபா 1,803,936 தொகை கடந்த கால பயன்பாட்டில் சீராக்குவதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மின்வலுவைக் கொள்வனவு செய்யும் உடன்படிக்கை தொடர்பான பயிற்சிப் பாடநெறி மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2015 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பாடநெறியின் செலவினம் ரூபா 4,995,754 தொகை மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

மீளாய்வாண்டின் போது கணனி மற்றும் அலுவலக உபகரணம், தளபாடங்களும் பொருத்திகளும் போன்ற இரண்டு விடயங்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் பட்டோலைகளுக்கிடையே முறையே ரூபா 865,462 தொகை மற்றும் ரூபா 59,189 தொகையான கிரய வேறுபாடுகளும், பெறுமானத்தேய்வு ஒதுக்கீடுகள் தொடர்பாக முறையே ரூபா 340,376 தொகை மற்றும் ரூபா 61,783 தொகையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உராய்வு நீக்கிகள் ஒழுங்குபடுத்தலுக்காக ஆணைக்குழுவுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் விலகல் பதிவுக் கட்டணங்கள் அரையாண்டிற்காக அடுத்து வரும் மாதத்தின் 30 நாட்களுக்கு முன் செலுத்த வேண்டிய போதிலும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய நிறுவனமொன்றினால் ரூபா 793,512 தொகையும், மீளாய்வாண்டிற்காக 03 நிறுவனங்களினால் ரூபா 8,211,265 தொகையும் ஆக ரூபா

9,004,777 கூட்டுத்தொகை 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஆணைக்குழுவிற்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஆ) மின் உற்பத்தி அனுமதிப்பத்திரதாரிகளுக்கு வழங்கப்படுகின்ற உற்பத்தி அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனை இலக்கம் 11 இன் பிரகாரம் குறித்த ஆண்டின் யூன் 30 இல் அல்லது அதற்கு முன்னரான தினத்தில் அல்லது தேசிய மின்சக்தி முறைமைக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 30 நாட்களுக்குள் அல்லது வருடாந்த ஒழுங்குபடுத்தல் கட்டண ஆணைக்குழுவிற்குச் செலுத்தவேண்டிய போதிலும் 2012, 2013 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 12,000 தொகை, ரூபா 104,000 தொகை மற்றும் ரூபா 39,132,900 தொகைகளாக ரூபா 39,248,900 கூட்டுத்தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கிடைத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதிய (Sec/2013/07) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சுற்றறிக்கையின் 3(i) ஆம் பந்தி | குத்தகையின் கீழ் ஊழியமாக இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம், படிகள், முற்பணக் கொடுப்பனவு, கட்டணம் போன்ற பணக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவால் படிகள் கவனத்தில் கொள்ளப்படாமல் அடிப்படைச் சம்பள அளவை அடிப்படையாகக் கொண்டு உழைக்கும் போதே செலுத்தும் வரி கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2000 சனவரி 31 ஆம் திகதிய பிஎப்/பீஈ/6 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பந்தி | முன்னைய ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் உத்தியோகத்தர்களால் செலுத்த வேண்டிய ரூபா 1,307,275 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2011 நவம்பர் 16 ஆந் திகதிய 24/2011 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 60 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களை சேவையில் ஈடுபடுத்தும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2007 ஒக்தோபர் 02 ஆந் திகதிய பீஈடி-45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் சமர்ப்பிக்கும் போதும் பணிப்பாளர் சபையின் பொறுப்புக்களைக் காண்பிக்கின்ற கூற்றொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 24,670,710 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 14,707,789 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 9,962,921 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டின் போது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 39,812,914 இனால் அதிகரித்திருந்ததுடன் இதற்காக ஆளுக்குரிய சம்பளங்கள் ரூபா 8,607,439 இனாலும், மதியுரைச் சேவைக் கட்டணங்கள் ரூபா 14,250,528 இனாலும், ஒப்பந்தச் சேவைகள் ரூபா 13,626,074 இனாலும் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்ததுடன் அதனுடன் ஒப்பிடும் போது உராய்வு நீக்கிகள் விற்பனையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற ரூபா 6,421,975 தொகை மற்றும் மின்சாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கை மின்சார சபையிலிருந்தும் இலங்கை மின்சார (தனியார்) கம்பனியிலிருந்தும் (LECO) உள்ளடக்கிய தனியார் மின்சார உற்பத்தியாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற வருடாந்த ஒழுங்குபடுத்தல் கட்டணம் ரூபா 48,432,150 தொகை அதிகரித்தமை மேற்கூறப்பட்ட மிகை ஏற்படுவதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 இன் 35 ஆம் இலக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் மூலம் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை நீர், மின்சாரம் மற்றும் எரிபொருள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்காக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருந்ததுடன் இது வரையில் 2009 இன் 20 ஆம் இலக்க இலங்கை மின்சக்தி அதிகாரச்சட்டத்தின் மூலம் மின்சாரத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் 2006 ஏப்ரல் 05 ஆந் திகதி பாராளுமன்ற பிரேரணை ஏற்றுக்கொள்ளலுடன் கனிய எண்ணெய் கைத்தொழிலில் உராய்வு எண்ணெய் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மாத்திரம் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆணைக்குழுவால் நீர் மற்றும் பெற்றோலிய கைத்தொழிலுக்குரிய அதிகாரச்சட்டத்தை திருத்துதல் தொடர்பாக உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் உரிய திருத்தச் சட்டம் அங்கீகரிக்கப்படாமையினால் அந்த கைத்தொழில்களின் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை மின்சார உற்பத்தி, தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் பகிர்ந்தளிக்கும் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக ஆணைக்குழுவிற்கு 311 விண்ணபப்பப்படிவங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 220 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அதன் படி மீளாய்வாண்டின் இறுதி வரையில் 91 விண்ணப்படிவங்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படாதிருந்ததுடன் அவைகளுக்கிடையே 78 விண்ணபப்பப்படிவங்கள் உரிய அமைச்சிற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டிருந்ததுடன் 13 விண்ணபப்பப்படிவங்கள் உரிய தேவையான பிரமாணங்களுக்கு இணங்காமையினால் எஞ்சியிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் ஆணைக்குழுவிற்குக் கிடைத்த பொதுமக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அந்த முறைப்பாடுகளில் ஆணைக்குழு முகவராக செயற்பட்டமை தொடர்பான விபரங்களும் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| முறைப்பாடுகளின் வகை | கிடைத்த அளவு | | வசதிகள் வழங்கப்பட்ட அளவு | |
|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2013 | 2014 |
| மின்சாரப் பட்டியல் மற்றும் மானி | 342 | 365 | 342 | 365 |
| பாவனையாளர் தொகுதி | 99 | 96 | 98 | 96 |
| வயர் வீதிகள் | 750 | 545 | 750 | 545 |
| புதிய இணைப்பு | 227 | 150 | 227 | 150 |
| துண்டித்தல் மற்றும் மீள இணைத்தல் | 108 | 67 | 107 | 67 |
| ஏனையவை | 221 | 530 | 221 | 530 |
| மாவட்ட செயலாளர்களிடமிருந்து கிடைத்த கடிதங்கள் | 320 | 160 | 319 | 160 |
| முன்னைய வருடத்திலிருந்து மு/வரப்பட்ட | - | 03 | - | 03 |
| | 2067 | 1916 | 2064 | 1916 |

2014 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவிற்குக் கிடைக்கின்ற சகல பொது மக்கள் முறைப்பாடுகளுக்காகவும் வசதிகள் வழங்கப்பட்டதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது முறைப்பாடுகள் முழுமையாகத் தீர்க்கப்படாதிருந்தமை கோவைகளின் படி அவதானிக்கப்பட்டது. இதன்படி மின்சக்தி அதிகாரச்சட்டத்தின் 39 ஆவது பிரிவு மற்றும் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 17(ஔ) பிரிவின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படுகின்றமை கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்படவில்லை.

(ஈ) ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது புனர்வாழ்வு எரிசக்தி அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் மற்றும் அவற்றின் மின்சக்தி உற்பத்தி இயலளவு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2013 ஆம் ஆண்டு | | 2014 ஆம் ஆண்டு | |
|---|---|---|---|---|
| | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.தொ) | அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | இயலளவு (மெ.தொ) |
| நீர் மின்சாரம் | 10 | 37.8 | 3 | 2.7 |
| காற்றுச் சக்தி | 1 | 9.8 | 4 | 34.8 |
| பல்வகைத் திணிவு | 1 | 10.0 | 1 | 5.0 |
| சூரிய சக்தி | - | - | 2 | 20.0 |
| வெப்பமேற்றப்பட்ட (நிலக் கரி) | - | - | 1 | 500.0 |
| அனல் (பெற்றோலிய) | - | - | 4 | 374.1 |
| | 12 | 57.6 | 15 | 936.6 |

(உ) ஆணைக்குழுவால் மின்சார உற்பத்திக்காக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கும் நடவடிக்கை 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சிறிய அளவிலான மின் உற்பத்திக்காக 201 மின்சார உற்பத்தி அனுமதிப்பதிரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த அனுமதிப்பதிரதாரர்களில் 55 பேர் மின்சார உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கவில்லை.

(ஊ) 2013 ஆம் ஆண்டின் நவம்பர் வரையில் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்காத அனுமதிப்பதிரதாரர்களின் எண்ணிக்கை 71 ஆக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதிப்பத்திரதாரர்களில் 14 பேர் 2013 ஆம் ஆண்டின் இறுதியளவில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததாக மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. மின்சார உற்பத்திக்காகவுள்ள அனுமதிப்பத்திரத்தின் முதலாவது பகுதியின் நிபந்தனை இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டதன் படி உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதலொன்று விநியோகிக்கும் அனுமதிப்பத்திரதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆணைக்குழு அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 45 ஆகவும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 42 ஆகவும் இருந்ததுடன் வெற்றிட ஊழியர்களின் எண்ணிக்கை 3 ஆகும்.

(ஆ) மதியுரைச் சேவை வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 16,386,528 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானம், செலவினம் மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பவற்றிற்கு இடையே 18 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையிலான கருத்திற் கொள்ளக்கூடிய அளவில் முரண்கள் இருந்தமையால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2011 ஒக்தோபர் 17 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்திலும் 2012 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்திலும், 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அக்கட்டளைகள் இதுவரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டண அறவீடு தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.